

# காஞ்சி

வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2004 கார்த்திகை 24 (9-12-73) | இதழ்: 22


★


உள்ளே......

சிங்கத்தை அடக்கினேன்!
(தம்பிக்கு அண்ணாவின் மடல்)

★

தீயசக்திகளின் போக்கு!
(தலையங்கம்)

★

மறு வாழ்வு
(குறுநாவல்)

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)


★

## ஓ...தங்கமயிலே...!

— பல்லவன் —

தாமரையின் சிரிப்பேந்தி
தண்ணிலவின் ஒளியேந்தி
தமிழ்போல நடக்கின்றாய் தங்கமயிலே—ஆகா
தகதகவென் றிருக்கின்றாய் தங்கமயிலே!

பூமணக்கும் சோலையிலே
பொன்னந்தி மாலையிலே
புன்னகைத்துக் கொல்லுகின்றாய் தங்கமயிலே-என்
புத்திதடு மாறுதடி தங்கமயிலே!

தேமாவின் கனியேந்தி
தித்திக்கும் அமுதேந்தி
தேர்போல வருகின்றாய் தங்கமயிலே—உனைத்
தீண்டிவிடத் தூண்டுகிறாய் தங்கமயிலே!

மாமனெனும் உறவேந்தி
மாங்குயிலின் மொழியேந்தி
மாயவலை வீசுகின்றாய் தங்கமயிலே—இரு
மைவிழியால் பேசுகின்றாய் தங்கமயிலே!

மாமலையின் அழகேந்தி
மங்கலப்பொன் விளக்கேந்தி
மாமல்லைச் சிலையாகத் தங்கமயிலே—என்
மனக்கோயில் புகுந்தாயே தங்கமயிலே!

காமனவன் என்நெஞ்சில்
கனல்மூட்டி எரிக்கின்றான்
கனவுகளை வளர்க்காதே தங்கமயிலே—பொறு
கைப்பிடிக்கும் காலம்வரும் தங்கமயிலே!

விலை: 0-25 காசு

## நெஞ்சு பொறுக்குதில்லையே!

# அணுசக்தி இலாகாவா? ஆரியசக்தி சமாஜமா?

இந்திய யூனியன் ஆட்சி என்பது அசல் பூணூல் ஆட்சிதான் என்பதற்கு வேறு எங்கும் போக வேண்டாம்.

இங்கே மத்திய ஆட்சியின் நிர்வாகத்தில் உள்ள தொழில் நிறுவனங்களைப் போய் பார்த்தாலே 'குருடனுக்கும்' தெரியும்.

ஆச்சாரம் பேசுவது, அன்றாடம் பூசை செய்வது ஆனால் அணுசக்தி இலாக்காவில் வேலை பார்ப்பது—இதுவே 'இவாள்'களின் நடைமுறையாகி விட்டது.

மலையாளிகளும், பார்ப்பனர்களும் தமிழ்நாட்டைத் தங்கள் வேட்டைக் காடாக்கிக் கொண்டு காரியமாற்றி வருகின்றனர்.

தப்பித்தவறி அந்த இலாக்காவில் உள்ளே நுழைந்த ஓரிரு தமிழர்களும் சித்திரவதைக்குள்ளாக்கப்படும் நிலை நினைத்தாலே நெஞ்சம் குமுறுகிறது.

சென்னையில் உள்ள அணுசக்தி ஆராய்ச்சி நிலையத்திலே பார்ப்பனர், மலையாளி, கன்னடர், தெலுங்கர் எல்லாம் ஒன்றாய் சேர்ந்துகொண்டு, அதை தங்கள் ஆதிக்க பீடமாக்கி ஒய்யார வாழ்வு நடத்துகின்றனர்.

மெட்ராஸ் அட்டாமிக் பவர் புராஜக்ட் என்றால் மலையாளிகள் அண்டு அக்கிரகாரங்கள் புராஜக்ட் என்றே சொல்லலாம்.

அதேபோல 'ரியாக்டர்ரிசர்ச் சென்டர்' என்றால் இந்தி பிரச்சார சென்டர்தான்.

ஊரையும் உலகையும் ஏமாற்ற ஒரு பெயர்.

உள்ளே தங்கள் ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்ள அரசாங்க அதிகாரங்களை அப்படியே பயன்படுத்திக் கொள்வது. இது பார்ப்பனர்களின் கைதேர்ந்த கலை.

சென்னையில் உள்ள அணுசக்தி இலாக்கா, அணுசக்தி இலாக்காவாக இல்லை. ஆரியசக்தி இலாக்காவாகவே இருக்கிறது.

போதாக்குறைக்கு மலையாளிகள் வேறு சேர்ந்து கொண்டு கேரள சமாஜம் நடத்தி வருகின்றனர்.

### கும்பாபிஷேகம்!

அணுசக்தியில் மின்சாரம் எடுப்பதற்காக இவர்களுக்கு அரசாங்க சம்பளம்.

ஆனால் பெரிய அதிகாரிகள் உட்பட, காமாட்சி அம்மன் கோயில் ஒன்றைக் கட்டி, அதற்கு கும்பாபிஷேகமும் செய்திருக்கிறார்கள்.

அதிகாரத்தைப் பயன்படுத்தி கெடுபிடி வசூல்! காமாட்சிக்குக் கோயில் கட்டியாகி விட்டது.

அடுத்தபடியாக பிள்ளையாருக்குக் கோயில் கட்டும் 'திருப்பணி' தொடங்கி விட்டது.

அதற்கு லாட்டரி சீட்டு அடித்து விற்பனை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

### அணுசக்தியும் ஆயுத பூசையும்!

அணுசக்திக்கும் ஆயுத பூசைக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?

ஆயுத பூசை வந்து விட்டால்போதும், ஆரியர் கூட்டம் அத்தனையும் வரிந்து கட்டிக்கொண்டு வசூல் வேலையில் இறங்கிவிடும்.

அடிமட்ட ஊழியர்களிடமிருந்து எல்லா தரப்பு ஊழியர்களிடமும் கட்டாய வசூல்.

யாராவது மறுத்தால் பழிவாங்கும் படலம் இந்த ஆண்டும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

### வேலைகளிலும் 'அவாளே' பங்கு

மயிலாப்பூர் பார்ப்பானிலிருந்து அமெரிக்காவில் இருக்கும் பார்ப்பான் வரை அவனது இன நலக்கண்ணோட்டத்தில் மாற்றம் என்பதே கிடையாது.

ஒரு பார்ப்பான் முதலில் நுழைந்து கொண்டால் போதும். பிறகு அலுவலகமே அக்கிரகாரமாகிவிடும். இதுதான் அவாளின் அகராதி. அணுசக்தி நிலையம் மட்டும் அதற்கு விதிவிலக்கு ஆகிவிடுமா என்ன? வேலைக்காக ஆள் எடுப்பது என்பதே இங்கு இல்லை. ஆளை முடிவு செய்து விட்டு பிறகு வேலையை உருவாக்குவதுதான் இங்குள்ள வேலை. இதுபற்றி எழுதுவதென்றால் அதை ஒரு புத்தகமாக வெளியிடவேண்டிவரும். அவ்வளவு சங்கதிகள் இருக்கின்றன. உதாரணத்துக்கு ஒன்றை தருகிறோம்.

### மூன்று பேரும் பார்ப்பனர்கள்

கடந்த ஆகஸ்ட் மாதம் கிளார்க்கு வேலைக்கு தேர்வு நடந்தது. 100 பேர் வந்து பரீட்சை எழுதினார்கள். அதில் மூன்று பேர் மட்டும் உடனே தேர்வு செய்யப்பட்டனர். யார் தெரியுமா?

உதவி நிர்வாக அதிகாரி இராகவன் மகன் வாசுதேவன்—பார்ப்பனர்.

உதவி நிர்வாக அதிகாரி வெங்கட்ராமன் மைத்துனன் தியாகராசன்—பார்ப்பனர்.

நிர்வாக அதிகாரி வெங்கடேசுவரனுக்கு உறவினர் வீட்டுப்பெண் வைஜெயந்தி இவர் ஓர் மலையாளப் பார்ப்பனர்.

இப்படி வேலைக்குத் தேர்வு செய்யும் 'ரெக்ரூட்மெண்ட்' பிரிவில் வேலை பார்ப்பவர்கள் அத்தனை பேரும் பார்ப்பனர்கள்தான். மருந்துக்குக்கூட ஒரு தமிழன் கிடையாது.

(4-ஆம் பக்கம் பார்க்க)

காஞ்சி வார இதழ்
நிறுவனர்: அறிஞர் அண்ணா

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 9—12—73 | இதழ் 22

# தீயசக்திகளின் போக்கு

கடந்த சில நாட்களாக சென்னை, திருச்சி போன்ற நகரங்களில் உள்ள மாணவர்கள் அறப்போர் என்ற பெயரில் சில அரசியல் கோமாளிகளின் தூண்டுதலுக்கு இரையாகி விட்டு, மாணவர் சமுதாயத்திற்கே ஒத்து வராத பல செயல்களைச் செய்து வருகின்றனர். பதவிச் சுவையை இழந்துவிட்ட ஆத்திரத்தில் காங்கிரஸ்காரர்கள் மாணவர்களை தூண்டி விடுகின்றனர். பொதுமக்களும், மாணவத் தோழர்களும், தூவெனக் காரி உமிழ்ந்துவிட்ட பின்னரும்கூட அந்த ஆட்சி அதிகார அரிப்பு—பதவிச் சுவையின் நமநமப்பு மாணவர்கள் பக்கம் வந்து வாலாட்டப் பார்க்கிறது.

இப்போது நடைபெறும் இந்த மக்கள் நலம் நாடும் கழக அரசைவிட இதற்கு முன்னால் ஆட்சி செலுத்திய காங்கிரஸ் ஆட்சி மக்களுக்கோ—மாணவர் சமுதாயத்திற்கு என்ன நன்மைகளை செய்துவிட்டது.

1965 - ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போர் தமிழகத்தில் நடைப்பெற்றபோது ஆட்சி செலுத்திய காங்கிரஸ் ஆட்சி என்னென்ன கொடுமைகள் செய்தன. அப்போது முதல்வராக வீற்றிருந்த பக்தவத்சலனார் தன் தாய்மொழிக்காகப் போராடிய மாணவர்களை எப்படியெல்லாம்கொடுமைபடுத்தினார். எத்தனை மாணவர்களை அன்றைய ஆட்சி சுட்டுக்கொன்றது ஆயிரக்கணக்கான மாணவர்கள் தடியடி பட்டு மாண்டனர்; தீக்குளித்தனர்; சிறையிலே வாடி வதங்கினர்.

இவ்வளவிற்கும் பிறகு அன்று முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் ஒரு நீதி விசாரணைக்கு உடன்பட்டாரா? இல்லை. அப்போது நீதி கேட்கச் சென்ற மாணவர்களை அடித்து விரட்டச் செய்தார். இன்று மாணவர்களுக்காக பரிந்துரை செய்ய வருகின்றார்; மாணவர்கள் பழைமையெல்லாம் மறந்துவிட்டார்கள் என்ற நினைப்பில். இந்த வேடிக்கையை பார்த்து தமிழக மக்கள் சிரிக்கின்றனர்.

ஏற்கெனவே முதுகுளத்தூரில் நடைபெற்ற பயங்கரமான சம்பவத்தின்போது நாற்பது பேர் கொலையுண்டார்கள். 40, 50 – நாட்கள் முதுகுளத்தூர் வட்டாரமே இரத்தக் கறையில் இருந்தது. அந்த நேரத்தில்கூட அப்பொழுது முதலமைச்சராக இருந்த காமராசர் அவர்கள் ஒரு நீதிவிசாரணைக்கும் சம்மதிக்க முடியாது என்றே கூறிவிட்டார். ஆனால் இன்றைக்கு எந்தச் சம்பவமென்றாலும் நீதி விசாரணை நடத்தி, அந்த நீதி விசாரணையின்—நீதிபதியின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு உடனடியாக அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுப்பது தான் கழக அரசு, நாம் நீதிவிசாரணைக்கு ஒப்புக்கொள்ளவில்லையே, இந்த கழக அரசு நீதிவிசாரணை வைத்து தகுந்த நடவடிக்கை எடுத்து மக்களின் நன்மதிப்பைப் பெறுகிறதே என்ற மனக்கசப்பால் காமராஜர் தன்னை மறந்து பேசுகிறார்; கழகத்தை பொறாமையால் தூற்றிக்கொண்டு வருகின்றார்.

மாணவர் சமுதாயத்திற்காக கடுகளவாவது மரியாதை தந்ததா காங்கிரஸ் சர்க்கார் என்பதை எண்ணிப் பாருங்கள். அன்று மாணவர் சார்பாக ஏதேனும் கோரிக்கை என்று எடுத்துச் சென்றால் செவி சாய்க்காத காங்கிரஸ் கட்சியின் முதுபெருந் தலைவர்கள் இன்று வரிந்து கட்டிக்கொண்டு மாணவர்களை தூண்டிவிடுகின்றனர். அதிலுள்ள இரகசியத்தை மாணவ நண்பர்கள் புரிந்துகொள்ளல் வேண்டும். உணர்ச்சிகளின் வடிவம்தான் மாணவர்கள் என்பதைப் புரிந்துக்கொண்டு தங்களின் சுயநலத்திற்காக மாணவர்களை எங்ஙனம் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்பதை உற்று நோக்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம். "**மாணவர் நலம் நாடும் அரசை**", "தமிழ் என்றால் உயிர் என்பர், தங்கத் தமிழுக்கு இழுக்கு என்றால் அதைத் தடுக்கத் தருகின்றேன், என் உயிரை முன்னால்" என்று கூறிய தென்னாட்டுக் காந்தி, இன்னாட்டு இங்கர்சால் நமது **பேரறிஞர் அண்ணா** அவர்கள் அமைத்துத் தந்த "இந்த கழக அரசை. தூற்றும், கழக அரசுக்கெதிராக மாணவர் சமுதாயத்தை தூண்டி விடும் அரசியல் தீயசக்திகளின் போக்கினைத் தமிழக மக்கள் நன்கு புரிந்துகொண்டுதான் இருக்கின்றார்கள்.

—**எழிலரசன்**

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

**இதோ பட்டியல்**

பார்ப்பனரைத் தவிர வேறு யாரும் அங்கே உள்ளே விடுவதே இல்லை பட்டியலைப் பாருங்கள்:

பிரதம நிர்வாக அதிகாரி—எஸ். வி. ராகவன்—பார்ப்பனர்

உதவி நிர்வாக அதிகாரி—எம். டி. ராகவன் பார்ப்பனர்

உதவி நிர்வாக அதிகாரி—என். வி. ரமணன்—பார்ப்பனர்

உதவி நிர்வாக அதிகாரி—டி. எஸ். வெங்கட்ராமன்—பார்ப்பனர்

உதவி நிர்வாக அதிகாரி—வி. கே. சந்தானம்—பார்ப்பனர்

நிர்வாக அதிகாரி வி. எஸ். வெங்கடேசுவரன்—பார்ப்பனர்

நிர்வாக அதிகாரி—கே. பாலகிருஷ்ணன்—பார்ப்பனர்

'கிளார்க்' வேலைக்குக் கேள்வித்தாள் தயாரிப்பதும், விடைகள் திருத்துவதும் பார்ப்பனர்கள்; இல்லையேல் மலையாளிகள் இவர்கள் தமிழர்களை உள்ளே விடாமல் இருப்பதிலே காட்டும் கட்டுப்பாடும் அக்கறையும் மிகபெரியது. தங்களுக்கு வேண்டிய இந்த மூன்று பேர்களுக்கும் வேலை கொடுப்பதாக முதலிலே முடிவுசெய்து கொண்டு, 100 பேரைத் தேர்வுக்கு அழைப்பதற்குப் பெயர் என்ன? ஆம். அதற்குப் பெயர்தான் பூனூல் புத்தி.

500 ரூபாய்க்கு குறைந்த வேலைகள் அனைத்தும் உள்ளூர் மக்களுக்கே ரிசர்வ் செய்யப்பட வேண்டும் என்பது மத்திய அரசின் கொள்கையாம். பாராளுமன்றத்திலே மிகப் பிரமாதமாகச் சொல்லிக் கொண்டார் மத்திய அமைச்சர் பக்ருதின் அலி அகம்மது. இதைப் பார்த்து அந்தந்த மாநிலத்துக்காரர்கள் சட்டகே செய்துகொண்டு விட்டனர்.

**மராட்டிய அரசின் உத்தரவு**

மராட்டிய மாநில அரசு சமீபத்தில் 80 சதவீத வேலையை மராட்டியருக்கே ஒதுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறது. ஆனால் இங்கு நடப்பது என்ன? தச்சர், ஹெல்பர் முதலிய வேலைகளுக்குக் கூட, மலையாளத்திலிருந்து ஆள் இறக்குமதி செய்யப்படுகிறது.

பெரிய அதிகாரிகள் நிலையில் இருப்பவர்கள் அத்தனைப் பேரும் பார்ப்பனர், மலையாளிகள் தான். ஒரே ஒரு தமிழர்தான் இருக்கிறார்.

இப்படி இருந்தும் டிப்டி சிப் புராஜெக்ட் இன்ஜினியர் பதவி வரும்போது இவரையும் தூக்கி எறிந்து விட்டார்கள். பார்ப்பனருக்கு எப்படிப் பட்ட ஆளாக இருந்தாலும் 'அவாள்' இனமே வர வேண்டும் என்பதுதானே குறி.

**ஜூனியருக்குப் பதவி**

இவரைவிட நான்கைந்து ஆண்டுகள் ஜூனியராக உள்ள எம். எச். பி. ராவ் என்ற தெலுங்கருக்கு தான் அந்தப் பதவியும் கொடுக்கப்பட்டது. பெரிய பதவிகளில் எப்படி எல்லாம் 'அவாள்' ஆதிக்கம் தலைவிரித்தாடுகிறது பாருங்கள்.

**சென்னை அனுசக்தி நிலையம்**

1. டிப்டி சீப் புராஜெக்ட் இன்ஜினியர் எம். எச். பி. ராவ்—ஆந்திரர்
2. பிரதம நிர்வாக அதிகாரி எஸ்: வி. ராகவன் அய்யங்கார்—பார்ப்பனர்
3. ஃபைனன்சு அக்கௌண்ட்ஸ் ஆபீசர்—ராதாகிருஷ்ணன் அய்யங்கார்—பார்ப்பனர்
4. பொது நிர்வாக அதிகாரி-ஈப்பன்-மலையாளி
5. ஸ்டோர்ஸ் ஆபீசர்—ஸ்தபதி—மலையாளி
6. ஓர்க்ஷாப் சி. வி. எஸ். சாஸ்திரி—கன்னட பார்ப்பனர்
7. எலக்ட்ரிகல் என். கே. மூர்த்தி கன்னட பார்ப்பனர்
8. சீப் இன்ஜினியர் சிவில்-சி. ஆர். ராமமூர்த்தி பார்ப்பனர்
9. டவுன்சிப் என்ஜினியர்-மேனன்—மலையாளி

**அனுசக்தி ஆராய்ச்சி நிலையம்**

1. திட்ட இயக்குநர்—என். சீனிவாச அய்யர், பார்ப்பனர்.
2. பிரதம நிர்வாக அதிகாரி—சக்ரவர்த்தி அய்யங்கார்—பார்ப்பனர்.
3. சீனியர் நிர்வாக அதிகாரி—தலைமைப் பூசாரி சாமிநாத அய்யர்—பார்ப்பனர்.
4. பைனன்சு அக்கௌண்ட்ஸ் ஆபீசர், பார்த்தசாரதி அய்யங்கார்—பார்ப்பனர்.

பார்ப்பனர்களும் மலையாளிகளும் தெலுங்கர்களும் கன்னடர்களும் வடநாட்டுக்காரர்களும் வளமாக வாழ்கிறார்கள், ஆனால், தமிழன் நிலையோ அவன் வாயில்லா ஊமை; தாய் இல்லா அனாதை! யாராவது ஓரிருவர் தப்பி தவறி தமிழர் நலனுக்காகப் பாடுபட முன்வந்தால் அவர்களுக்கு "புரொமோஷன்" கிடையாது. அவர்கள் மேல் வேலைச்சுமையை சுமத்தி தொல்லைகள் கொடுத்து அலைக்கழிக்கப்படுகின்ற நிலைதான். அடிமட்ட ஊழியர்களிலும் நம்மவருக்கு ஆதரவும் இல்லை; பாதுகாப்பும் இல்லை.

**தமிழர்கள் கீழிறக்கம்**

ஒரிரு தமிழன் ஒரு செக்ஷனில் தலைமையாக இருந்தால் அவனை கீழே இறக்கிவிட்டு அங்கே பார்ப்பானையோ, மலையாளியையோ, கொண்டு வந்து போட்டு விடுகிறார்கள். தமிழ்நாட்டில் தமிழர்களின் நலனுக்காக துவங்கபட்ட திட்டத்தில் இந்தநிலை இதேநிலை கேரளாவிலோ, ஆந்திராவிலோ அல்லது எந்த மாநிலத்திலோ இருக்குமா? பாரதமாதாவுக்குப் பல்லவி பாடிக் கொண்டு ஒருமைப்பாடு ஒப்பாரி வைக்கும் தேசியத் தமிழர்களே, இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

**தமிழக அரசு தலையிட வேண்டும்**

அணுசக்தி இலாகாவில் புகுந்துள்ள ஆரிய, மலையாள சக்திகள் எப்போது ஒழியப்போகிறது? தமிழன் தலைநிமிர்ந்து நிற்கும் நாள் என்னாள்?

இதுபற்றி நமது தமிழக அரசு டில்லி அரசிடம் கேட்கவேண்டும். இதுதான் தமிழர் நலனில் அக்கறை உள்ள ஒவ்வொருவரும் கேட்கும் கேள்வி!

நன்றி: விடுதலை 31—10—73

# சிங்கத்தை அடக்கினேன்!

## தம்பி,

இப்படி ஒரு உரையாடல் உன் செவியில் விழுந்தால் என்ன எண்ணிக் கொள்வாய்?

ஒரு குரல்:- நான் சிங்கத்தின் மீது சவாரி செய்தேன்.

மற்றோர் குரல்:- நான் யானைமீது உட்கார்ந்தேன்.

வேறோர் குரல்:- ஜோரான குதிரைமீது நான் உட்கார்ந்து கொண்டேன்.

இன்னோர் குரல்:- நான் அன்னப்பட்சி மீது உட்கார்ந்திருந்தேன்.

மற்றோர் குரல்:- அழகான மயில்மீது நான் உட்கார்ந்து கொண்டேன்.

இவ்விதமாகக்கூட ஒரு உரையாடல் நடைபெற்றிருக்க முடியுமா? கற்பனை இருக்க வேண்டியது தான், ஆனால் இப்படியா சிங்கத்தின் மீது அமர்ந்தேன், யானை மீது அமர்ந்தேன்—என்று ஒருவருக்ொருவர் பேசிக்கொள்ளும் நிலைமை எங்கே இருக்க முடியும்?—என்று கேட்கத் தோன்றும்.


இப்படி ஒரு உரையாடல், நடைபெற்றிருக்கவே முடியாது என்று அடித்துப் பேசிவிடாதே தம்பி! நன்றாக யோசித்துப் பார்த்துச் சொல்லு, இவ்விதமான பேச்சு உன் காதில் விழுந்தால், என்ன எண்ணிக்கொள்வாய்? யார் இப்படிப் பேசியிருக்க முடியும்? எந்த இடத்தில் இவ்விதமான பேச்சு இருந்திருக்க முடியும்? விளங்கவில்லையா? சரி! நானே கவனப்படுத்துகிறேன்.

திருவிழா, பேரூரில். உள்ளூர் வெளியூர் கூட்டம் நிரம்ப. மகிழ்ச்சி. ஆரவாரம்! கடைகள், அலங்காரமாக! களியாட்டம்! கரக ஆட்டம்! மயிலாட்டம் ஒயிலாட்டம்! சிறுவர் சிறுமியர் ஓடிஆடி விளையாடுகிறார்கள்! இங்கு ஒரு பக்கத்தில் குடைராட்டினம்—(சில இடங்களிலே ரங்கராட்டினம் என்பார்கள்) அமைத்திருக்கிறான் ஒருவன், சிறார்களுக்காக! குடைராட்டினம் தெரியுமல்லவா! சிங்கம், புலி, யானை, குதிரை, அன்னம், மயில், மாடு, ஆடு, கட்டில், தொட்டில், சோபா, இப்படி மரத்தால் செய்யப்பட்டு வண்ணம் தீட்டப்பட்ட பொம்மைகள் தொங்கவிடப்பட்டிருக்கும்; காசு கொடுத்து விட்டு அவரவர் தத்தமக்கு விருப்பமானதின் . மீது உட்காந்து கொள்ளலாம்; கீழே நின்றபடி, குடைராட்டினக்காரன், அவைகள் சுற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள விசையைத் திருப்பிவிடுவான்; உடனே ரங்கராட்டினம் சுழலும், வேகமாக; வேடிக்கையாக; சிங்கத்தின்மீது சவாரி செய்வதுபோல, யானைமீது ஏறி ஓட்டுவதுபோல, சிறார்களுக்கு ஒரு மகிழ்ச்சி; குடைராட்டினம் சுற்றச்சுற்ற, சிறார்களுக்குத் தாங்கள் ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கும் சிங்கம், புலி, யானை, குதிரை ஆகியவைகளைத் தாமே வேகமாக ஓட்டிக் கொண்டு போவதாக ஒரு நினைப்பு; அதிலே ஒரு மகிழ்ச்சி; ஒரு ஆரவாரம்.

அந்த மகிழ்ச்சி ஆரவாரத்தின் விளைவாக சிறுவர்களுக்கிடையே எழும் உரையாடல்தான், நான் முதலில் குறிப்பிட்டிருந்தது.

இப்போது மறுபடியும் துவக்கத்தைப் படித்துப்பார், தம்பி! இவ்விதமான உரையாடல் நடைபெற்றிருக்கவேவா முடியாது; சொல்லு. இவ்விதமான உரையாடல் உன் காதிலே விழுந்ததும் என்ன தோன்றும்? சிறுவர்கள் மகிழ்ச்சியால் பேசுகிறார்கள்!—என்று தோன்றுமே தவிர. ஏ! அப்பா! எத்தனைப் பெரிய வீரனாக இருக்கவேண்டும் சிங்கத்தின்மீது சவாரி செய்தவன்!! என்று வியந்து, அவன் எதிரே அஞ்சி நின்றிடவேண்டும் என்று தோன்றும். குழந்தைகள் பேசுகின்றன! குடைராட்டினத்தில் உட்கார்ந்து மகிழ்ச்சிபெற்றதால், பேசுகிறார்கள்!—என்றுதான் எண்ணிடத் தோன்றும்,

சிறார்கள், மகிழ்ச்சி காரணமாக இது போலப் பேசுவதைக் கேட்கும்போது, நமக்கேகூட இனிப்பாக இருக்கும்.




போயும் போயும் உனக்கு ஆடுதானா கிடைத்தது; ஏன் யானை கிடைக்கவில்லையா? என்று கேட்டு மகிழ்வோம்!

ஏ! பயலே! நீ பெரிய போக்கிரியடா! கொஞ்சம்கூடப் பயப்படாமல், அவ்வளவு பெரிய யானைமீது உட்கார்ந்து கொண்டாயே!! என்று பேசிக்கொண்டே கன்னத்தைக் கிள்ளிவிடுவோம்.

கேட்டாயா சேதி! நம்ம மகனை என்னமோ மட்டமாகக் கணக்குப்போட்டாயே! தெரியுமா விஷயம்! சிங்கத்தையே அடக்கி, அதன்மீது ஏறி உட்கார்ந்து, பிடரியைப் பிடித்து உலுக்கி உலுக்கி எடுத்துவிட்டான், நம்ம மகன்! என்று பெருமிதத்துடன் கூறி மகிழ்வோரும் உண்டு!

ஆனால், சிறார்கள் அல்ல, பெரியவர்கள்—மிகப் பெரியவர்கள்—குடை ராட்டினத்துப் பொம்மைகளின்மீது உட்கார்ந்து சுற்றிவிட்டு, உண்மையாகவே சிங்கத்தையும் யானையையும் அடக்கிய மாவீரர் போலப் பேசிடக் கேட்டால், எப்படி இருக்கும்? தாங்கிக்கொள்ள முடியாத எரிச்சலைத்தானே மூட்டி விடும்.

எவனும் என்னைக் கவிழ்க்க முடியாது!
யாருக்கும் நான் பயப்படமாட்டேன்!
எல்லா பணக்காரர்களையும் ஒழித்துக் கட்டிவிடப் போகிறேன்.

இவ்விதம், காமராஜர் பேசுகிறார்! குடைராட்டினத்தில் ஏறி, வேடிக்கை பெற்ற குழந்தைப் பருவத்தினரா, இவர்? இவரா இப்படி, சிங்க பொம்மைமீது உட்கார்ந்து நான் சிங்கத்தின்மீது சவாரி செய்தேன் என்று குதூகலமாகக் கூவிடும் குழந்தைபோல, பணக்காரர்கள் அமைத்துக் கொடுத்திருக்கும் குடைராட்டினம் போன்ற செல்வாக்கின்மீது அமர்ந்து, சுற்றிக்கொண்டு நான் பணக்காரர்களை ஒழித்துக் கட்டுவேன், ஒருவருக்கும் பயப்படமாட்டேன் என்று வீராவேசப் பேச்சுப் பேசுவது? ஆனால் பேசுகிறார்! அந்தப் பேச்சு, கேட்டு நாடே, தமது வீரதீரத்தை வியந்து பாராட்டும் என்று வேறு எதிர்பார்க்கிறார்! நாட்டு மக்களை ஏமாளிகள் என்றே தீர்மானித்து விட்டார்போல இருக்கிறது.

நான் எப்படியும் சோஷியலிசத்தை நடத்தி வெற்றி காணத்தான் போகிறேன்! யாரும் தடுக்க முடியாது!—என்கிறார்.

யாரய்யா பெரியவரே! சோஷியலிசத்தைத் தாங்கள் கொண்டு வருவதைத் தடுக்கிறார்கள்? என்று கேட்டால், எல்லோருந்தான்! கம்யூனிஸ்டு கட்சிகள், பிரஜா—சோஷியலிஸ்டு கட்சி, சோஷியலிஸ்டு கட்சி, தி. மு. க., தமிழரசுக் கழகம், சுதந்திரா கட்சி, எல்லாமேதான்! நான் சோஷியலிசத்தைக் கொண்டு வருவதைத் தடுக்கப் பார்க்கின்றன; கெடுக்கப் பார்க்கின்றன!—என்று இடிமுழக்கம் செய்கிறார்.

இந்த நாட்டிலே உள்ள எல்லாக் கட்சிகளுமே, சோஷியலிசத்தை இவர் கொண்டு வருவதைத் தடுக்கின்றனவாம்; எதிர்க்கின்றனவாம். இவருடைய கட்சியில் உள்ள முதலாளிகள் தவிர, மற்ற எல்லோரும் சோஷியலிச விரோதிகளாம்!!

தம்பி! குடைராட்டினம் ஏறி மகிழ்ந்திடும் குழந்தைகள் கூட இப்படி ஒரு வேடிக்கை காட்ட முடியாது! அவ்வளவு வேடிக்கை காட்ட இந்த அகில இந்தியா! தம்மைச் சுற்றிலும், பகைவர்கள் நிற்பது போலவும், தமது வீர தீரத்தால் மட்டுமே அந்தப் பகையை வீழ்த்தி, சோஷியலிசத்தை வெற்றி பெறச் செய்ய முடியும் என்பது போலவும் பேசிக்கொண்டிருக்கிறார், அவருடைய பேச்சைக் கேட்டு, அகமகிழ்கிறார்கள். காந்தியார் காட்டிய வழி நடந்த தொண்டர்கள், தியாகிகள் அல்ல, பிரிட்டிஷ் அடக்குமுறைக்கு ஆளான வீரர்கள் அல்ல; சோஷியலிசம் மலர்ந்திடின், புதுவாழ்வு பெறக்கூடிய ஏழை எளியோர் அல்ல; சோஷியலிசம் எனும் திட்டத்தை நிறைவேற்றி வைக்க எதனையும் இழந்திடவும், எவ்வளவு இன்னலையும் தாங்கிக்கொள்ளவும் தயாராக உள்ள இலட்சியவாதிகள் அல்ல! யார் மகிழ்கிறார்கள் தெரியுமா?

வாண்டையார்
வடபாதி மங்கலத்தார்
நெடும்பலத்தார்
குன்னியூரார்
மூப்பனார்
மன்றாடியார்
மகாலிங்க ஏழையார்
பேட்டையார்
பெரும்பண்ணையார்
செய்யூரார்
வலிவலத்தார்
இலஞ்சியார்
ராமநாதபுரத்தார்
செட்டிநாட்டார்
சிவகெங்கைச் சீமையார்
மோட்டார் மன்னர்
சிமிட்டிச் சீமான்
இரும்புக் கோமான்
அலுமினிய அதிபர்
ஆலை ஆள்வோர்

இவர்களெல்லாம், தம்பி! ஆனந்தத் தாண்டவமாடுகிறார்கள், ஈடு எதிர்ப்பற்ற எமது மாபெருந் தலைவர், பணக்கார ஆதிக்கத்தை அழித்து ஒழித்து, சோஷியலிசத்தைக் கொண்டுவரப்போகிறார்!! யார் தடுத்தாலும், அஞ்சமாட்டார்! எவர் எதிர்த்திடினும், முறியடித்தே தீருவார்! சோஷியலிசம் வெற்றிபெற்றே தீரும்! எமது மாபெருந்தலைவர், எமது உள்ளம் குளிர்ந்திட, உவகை பெருகிட, சோஷியலிசம் கொண்டுவரப் போகிறார்! கம்யூனிஸ்டுகளே, உமது எதிர்ப்பு எமக்குக் கடுகு! சுதந்திராக்களே! உமது எதிர்ப்பைச் சுட்டுப் பொசுக்கிச் சூரணமாக்கிப் போடுவோம்! ஏ! தி.மு.கழகத்தினரே! தீர்த்துக் கட்டிவிடுகிறோம் உங்களை! சோஷியலிஸ்டுகளே! உங்களை ஒழித்துக்கட்டப்போகிறோம்!! என்றெல்லாம் பாடுகிறார்களாம். ஆனந்த நடனம் ஆடுகிறார்களாம், எப்போது வரும் இந்த சோஷியலிசம்! கண்குளிரக் காணவேண்டும்!—என்று வழிமேலே விழிவைத்துக் காத்துக் கொண்டிருக்கிறார்களாம்; நம்பச் சொல்லுகிறார், காமராஜப் பெரியவர்.

மதப்புரட்டுகளை ஒழிக்கப் போகிறேன் என்று ரஸ்புடீன் சொன்னதில்லை.

கொடுங்கோலாட்சியை வீழ்த்தப் போகிறேன் என்று ஜார் சொன்னதில்லை.

எதேச்சாதிகாரத்தை அழித்திடப் போகிறேன் என்று பிரன்ச்சு நாட்டு மன்னன், லூயி சொன்னதில்லை.

ஆனால், காங்கிரசிலே உள்ள முதலாளிகள், சோஷியலிசத்தைக் கொண்டு வரப் போகிறோம், சோஷியலிசத்தைக் கொண்டு வரச்சொல்லி, எமது தலைவர் காமராஜரை வற்புறுத்திக் கொண்டு வருகிறோம்; அவர் சோஷியலிசம் கொண்டு வர அரும்பாடுபடுவதற்கு நாங்கள் துணையாக நிற்கிறோம், அவருடைய துணைகொண்டு சோஷியலிசத்தைக் கொண்டு வந்தே தீருவோம்—என்று சொல்லுகிறார்களாம். நம்பச் சொல்லுகிறார்கள், காங்கிரஸ் கூடாரத்தில் நாவாணிபம் நடாத்திடும் நல்லோர்கள்!!

இரத்த சோகை நோயால் பிடிக்கப்பட்டுள்ள ஆடுகளுக்கு, ஓநாய் 'இரத்த தானம்' தரப் போகிறதாம்! டாக்டர் காமராஜர் இரத்தம் எடுத்து, ஆடுகளுக்குச்

செலுத்தப் போகிறாராம்! நம்பச் சொல்லுகிறார்கள், நாட்டு மக்கள் எதைச் சொன்னாலும் கேட்டுக்கொள்ளுவார்கள் என்று ஒரு தவறான கணக்குப் போட்டுக் கொண்டு,

நிலமில்லாத உழவன்
நிம்மதியில்லாத பாட்டாளி
மாடாய் உழைக்கும் தொழிலாளி
வரண்ட தலையினன்
இருண்ட கண்ணினன்

இல்லையே! இல்லையே! என்று ஏங்குபவன்,

கொண்டு போய்விடு கடவுளே! என்று இறைஞ்சுபவன்.

குணம் தேடுபவன்! மரக்கிளை நாடுபவன்!

குமுறிக் கிடப்பவன்! குற்றுயிரான்!

தம்பி! இவர்களெல்லாம் கூடப் பெறமுடியாத ஆனந்தத்தை ஊரை அடித்து உலையிலே போட்டிடும் உத்தமர்கள், ஒன்றை ஒன்பதிற்கு விற்று கொள்ளை இலாபம் அடித்திடும் குணாளர்கள், இருப்பை மறைப்போர், இருப்பதை மறைப்போர் இலாபத்தை மறைப்போர் போன்ற திருவாளர்கள் பெறுகின்றனராம், சோஷியலிசத்தை எப்படியும் கொண்டு வந்தே திருவேன், எந்த எதிர்ப்புக்கும் அஞ்சமாட்டேன் என்று காமராஜர் கூறுவது கேட்டு. நம்பச் சொல்லுகிறார்கள்!!

இவர்களை உடன் வைத்துக்கொண்டு தான் காமராஜர் பேசுகிறார், நான் பணக்காரர்களை ஒழித்துக் கட்டுவேன் என்று!

இவருக்கு 'சீடர்களாக' நின்று கொண்டுதான், இந்த முதலாளிமார்கள் கூறுகிறார்கள் எம்மை ஒழித்திட வந்த தலைவனே வாழ்க!! எமக்கு முடிவுகட்ட வந்திருக்கும் முதல்வனே வாழ்க! வாழ்க!- என்று. நம்பச் சொல்லுகிறார்கள், தம்பி! எதனையும் ஆய்ந்தறியும் திறனை இயல்பாகவே பெற்றுள்ள தமிழர்களைக்கூட!!

சோஷியலிசம் வெற்றி பெற்றால்......! என்று கூறிவிட்டு, காங்கிரஸ் பேச்சாளர்—காங்கிரஸ்காரர் அல்ல—பேச்சாளர்!- -கண்களை மூடுகிறார், அவர் மனக்கண்முன் தோன்றிடும் காட்சிகளை எடுத்துக் காட்டுகிறார்.

மாளிகையிலே சிலர்
மண்குடிசையிலே பலர்!
அரண்மனைகளிலே சிலர்
ஆலமரத்தடியில் பலர்!
செல்வத்தில் புரண்டபடி சிலர்
செல்லரித்த வாழ்வினர் பலர்!

இந்த நிலைமை இருந்திடாது! எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடலாம்! எங்கும் இன்பம்! எவருக்கும் புது வாழ்வு, நல்வாழ்வு, முழு வாழ்வு!!

இன்று பார்க்கிறோமே, அதோ கோட்டீஸ்வரர், கப்பல் வியாபாரத்தில் சம்பாதித்தவர்! இதோ பல இலட்சங்களுக்கு அதிகாரி, பல ஆலைகள் நடத்திப் பணம் திரட்டியவர்! அதோ சீமான், வாணிபத்தில் கிடைத்த இலாபம் பெற்றவர்!! பொருளாதாரத் துறையில் இதுபோல 'எகபோக மிராசு' பாத்யதை பெற்றிருப்பவர்களெல்லாம் இருக்க முடியுமா?

இருக்கவிடப் போவதில்லை! இருக்கவிடமாட்டார் எமது தலைவர்! என்று வீரம் சொட்டச் சொட்ட பேசுவர். ஆனால் இதனை ஒரு குறும்புப் புன்னகையுடன் யாரார் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்?

பெரிய நிலச்சுவான்தாரர்கள்
மாஜி—மன்னர்கள்
பல கம்பெனிகளின் அதிபர்கள்

என்ன எண்ணிக்கொண்டு, இவர்கள் காமராஜர் பேசுவதையும் அவருக்கு 'லலி' பாடிடுவோர் பேசுவதையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்?

துவக்கத்திலே நான் காட்டினேனே உரையாடல். நான் சிங்கத்தின்மீது சவாரி செய்தேன், நான் யானைமீது சவாரி செய்தேன். நான் குதிரையை ஓட்டிச் சென்றேன் என்று குடைராட்டின' வேடிக்கை பெற்ற குழந்தைகள் பேசிக்கொள்வதாக, அந்தப் பேச்சு போன்றது, காமராஜரும் அவருடைய புகழ்பாடிகளும் பேசுவது என்றுதான் எண்ணிக்கொள்வார்கள்.

சிறார்களின் பேச்சு எப்படி சிந்துபோல இனிக்கிறதோ, பெற்றோர்களுக்கு. அது போல காமராஜர் கூட்டத்தாரின் பேச்சு இனிக்கிறது அவர்களை ஊட்டி வளர்த்திடும் முதலாளிமார்களுக்கு.

ஆகவே அவர்கள் அத்தகைய பேச்சைக் கேட்டு வேடிக்கை பெறுகிறார்கள்; மேலும் பேசச் சொல்லி உற்சாகப்படுத்துகிறார்கள்!

உள்ளபடி சோஷியலிசத்தைக் கண்டிடும் நடவடிக்கையிலே ஈடுட்டாலோ, பெரிய புள்ளிகளின் இலாபவேட்டைக்குக் குந்தகம் விளைவிக்கும் செயலில் இறங்கினாலோ, இந்த 'இலாபவேட்டைக்காரர்கள்' இப்படியா மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டிருப்பார்கள்!

பேதையும் அவ்விதம் கூறிட மாட்டானே!

சிறார்களின் பேச்சுகேட்டு மகிழ்ந்திடும் பெற்றோர் போல, சோஷியலிசம் பேசும் காங்கிரஸ் தலைவர்களிடம் முதலாளிகள் நடந்துகொள்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம்,

காங்கிரஸ் பேசிடும் சோஷியலிசம் வெறும் பேச்சு என்பதை அவர்கள் உணர்ந்திருப்பதனால்தான்;

காங்கிரஸ், சோஷியலிசத்தைப் பேசிக் கொண்டே, முதலாளிகள் மேலும் மேலும் பணம் திரட்டிக்கொள்ள வழிசெய்து கொடுக்கிறது, துணைநிற்கிறது என்பதனை முதலாளிகள் அறிந்திருப்பதனால்தான்.

அதே முதலாளிகள், காங்கிரஸ் தலைவர்களின் பேச்சு, பேச்சோடு நிற்கப்போவதில்லை, செயலிலே அவர்கள் ஈடுபடப்போகிறார்கள், முதலாளிகளின் ஆதிக்கத்தை முறியடிக்கப்போகிறார்கள் என்று தெரிந்துகொண்டால், இன்று காட்டுகின்ற கனிவா காட்டுவார்கள்? இன்று அவர்கள் காங்கிரசிடம் கனிவு காட்டுவது மட்டுமல்ல, சோஷியலிசத்துவத்திடமே கூட அல்லவா கனிவு காட்டுகிறார்கள்!! வேங்கை சைவத்தின் மேன்மைபற்றி உருகிப் பேசுவதுபோல அல்லவா, இந்த முதலாளிகள், சோஷியலிசம் கொண்டுவரப்போவதாகக் கூறும் காங்கிரஸ் கட்சியின் மேன்மைபற்றி உருக்கத்துடன் பேசுகின்றனர்!

ஏழ்மையும் அதன் விளைவாக அறியாமையும் இந்த நாட்டிலே எவ்வளவு அழுத்தமாகக் கப்பிக்கொண்டிருப்பினும், வெகு எளிதாக மனமயக்கம் கொண்டுவிடக் கூடிய நிலையிலே பெரும்பாலான மக்கள் இருந்திடினும், இவ்வளவு பச்சையான புரட்டுப் பேச்சை, இவ்வளவு வெளிப்படையாகத் தெரிகிற முரண்பாடுள்ள போக்கை மக்கள் நம்பிடப் போவதில்லை. முதலாளிகள்கூடி, சோஷியலிச விழா நடாத்தி, காமராஜர் சோஷியலிச சிற்பி என்று பேச்சாளர்களைவிட்டு பொழியச்செய்து மகிழ்வதைக் காணும்போது, என்ன நேர்த்தியான நாடகம் நடத்துகிறார்கள்! என்று எண்ணுமலிருக்கமுடியுமா!

கடன் கொடுத்து, தவறான கணக்குக் காட்டி, நிலபுலத்தைக் கைப்பற்றிக் கொண்டவன்,

விளைந்தது அவ்வளவையும் அறுத்தெடுத்துக் குவித்ததும், களஞ்சியத்திலே கொண்டுபோய்ச் சேர்த்துக் கொண்டு காலம் முன்போல இல்லை! கலம் நெல் கூலியாகத் தருவதற்கு இல்லை!—என்று பேசி, உழைத்தவன் வயிற்றில் அடித்திடும் உத்தமன்,

கள்ளச் சந்தையில் திரட்டிய பணத்தை தங்கக் கட்டிகளாகவும், மின்னும் வைரங்களாகவும் மாற்றி பதுக்கி வைத்துக்கொண்ட பரந்தாமன்

இவர்களெல்லாம் கூடி, காங்கிரசை சோஷியலிசம் பேசச் சொல்லிக்கேட்டு மகிழ்கிறார்கள் என்பதனைப் புரிந்துகொள்ளவா, ஏழை எளியோர்களால் முடியாது! அவர்கள் அச்சம் காரணமாகப் பேசுவதில்லை. பேசினால்? ஏடு கொள்ளாது! நாடாள்வோர் தாங்கிக் கொள்ளமாட்டார்கள்! வேடிக்கையா காட்டுகிறீர்கள் வேடிக்கை! வேதனையிலே எங்களைத் தள்ளிவிட்டவர்கள் நீங்கள்! எமது உழைப்பின் பலன் எமக்கு வந்திருந்தால் நாங்கள் ஏன் இப்படி உழல்கிறோம்? அந்தப் பலனை அபகரித்துக்கொண்டு, சீமானாகி கனவானாகி, இப்போது எங்களையே பார்த்து ஐயோ! பாவம்! துரும்பாக இளைத்துவிட்டாயே! பால் தருகிறேன் குடி! பழம் தருகிறேன் சாப்பிடு!—என்று பசப்புப் பேச்சுப் பேசுகிறீர்கள்—என்றெல்லாம் கொதித்துக் கூறுவான். ஆனால் அவனை, அவனுடைய ஏழ்மை மனதில் பட்டதைச் சொல்லமுடியாதபடி தடுக்கிறது.

ஏழை ஏதும் பேசாது இருப்பதையே அவன் தன் ஒப்புதலைத் தந்துவிட்டான் என்று, காங்கிரஸ் தலைவர்கள் கருதிக்கொள்கிறார்கள்.

ஏழை பேசவில்லை! பெருமூச்செறிகிறான்! அந்தப் பெருமூச்சு, பேச்சைவிட வலிவு மிக்கது.

பெருமூச்சு வளர்ந்து வளர்ந்தே, புரட்சியாக வடிவம் கொண்டிருக்கிறது; பல்வேறு நாடுகளில்.

ஏழையை ஏய்த்துவிட்டோம், மயக்கிவிட்டோம் என்ற எண்ணத்துடன் முதலாளிகள் முகத்திலே புன்னகையும், அக்ரமம் நடக்கிறது, அதனைத் தடுக்க முடியவில்லை; அக்ரமம் நடக்கிறது என்று வெளியே பேசவும் முடியவில்லையே என்று குமுறி ஏழையிடமிருந்து கிளம்பிடும் பெருமூச்சும்—இன்று காண்கின்றோம். தம்பி! நெருக்கடிமிக்க கட்டம் என்பதனைத் தான் இந்த நிலை எடுத்துக் காட்டுகிறது.

நிலை இது போலிருக்க, 'அகில இந்தியா' மார்தட்டுகிறார், என்னையாரும் கவிழ்க்க முடியாது, நான் யாருக்கும் அஞ்சப் போவதில்லை, சோஷியலிசம் ஏற்பட்டே தீரும் என்றெல்லாம் பேசுகிறார்.

வேடிக்கையான பேச்சு! குழந்தை வீரத்தைப் பொழிந்து தள்ளுகிறது!! என்று பெற்றோர் குழந்தையைத் தட்டிக் கொடுப்பதைப் போல காமராஜரைத் தட்டிக் கொடுக்கிறார்கள், பேசு! பேசு! நன்றாகப் பேசு! நிறையப் பேசு! சோஷியலிசம் பேசு! கேட்டு, கை தட்டுகிறோம்!—என்று முதலாளிகள் கூறுகிறார்கள்.

அதே முதலாளிகளுக்கு ஏதாகிலும் தமக்குக் கேடு தரும் காரியம் நடந்துவிடக் கூடுமோ என்ற சந்தேகம் துளி தோன்றினாலும், தட்டிக்கொடுப்பதை நிறுத்திவிட்டு கூப்பிட்டுக் கேட்கிறார்கள், "என்ன இது, பேச்சு ஒரு தினுசாக இருக்கிறதே?" என்று.

பார்த்தோமல்லவா, பாங்குகளை நாட்டுடைமை ஆக்கவேண்டுமென்று எர்ணுகுளத்திலே காங்கிரஸ் ஒரு பேச்சுப் பேசியதும், முதலாளிகள் சீறியதை.

பம்பாயில் அமைச்சர் பட்டீலை, அழைத்து வந்து தம் எதிரிலே நிற்கவைத்துக் கொண்டு செல்வபுரியினர், விளக்கம் தந்திடச் சொன்னார்களே!

அமைச்சர் பட்டீலும், அடக்க ஒடுக்கத்துடன், பற்று பாசத்துடன். முதலாளிகளிடம் விளக்கம் அளித்தாரே! இதழிலே கண்டோமல்லவா.

ஒரு தீர்மானம், ஒப்புக்குப் போட்டோம் பாங்குகளைத் தேசிய மயமாக்குவோம் என்று; அதற்கேவா இப்படி அச்சம் கொள்வது என்றெல்லாம் பட்டீல் சமாதானம் செய்திருக்கிறார்.

உண்மையாகவே சோஷியலிசம் கொண்டு வருபவர்களாக இருந்தால் இப்படியா, முதலாளி ஒரு துளி கவலைப்பட்டாலும், முகத்தைச் சுளித்துக் கொண்டாலும், அவன் முன் முழங்கால் படியிட்டு விடுவார்கள்.

ஏன் அவ்விதமான அச்சம், முதலாளிகளிடம்? சோஷியலிசம் பேசுபவர்களுக்கு? காரணம், பட்டீல் அறிவார்; காமராஜருக்கும் தெரியும். அவர்கள் ஊட்டி வளர்ப்பவர்கள்! அவர்கள் கொடுத்தபடி இருக்கும் பல இலட்சக் கணக்கான தொகையைக் கொண்டுதான் காங்கிரசின் தேர்தல் வேட்டையே

நடந்துவருகிறது. அத்தகைய முதலாளிகள் தயவு கிடைக்காமற் போய் விட்டால், தேர்தல் களத்திலே என்ன கதி நேரிடுமோ என்று எண்ணுகிறபோதே நடுக்கம் எடுக்கிறது. அதனுல் முதலாளிகளின் மனம் கோணுதபடி நடந்து கொண்டாக வேண்டும் என்ற அச்சம் பிடித்தாட்டுகிறது!

இந்த இலட்சணத்தில் வீரப் பேச்சு வேறு!!

முதலாளிகள் காங்கிரசை எந்த அளவுக்கு ஆட்டிப் படைக்கிருர்கள் என்பதை எடுத்துக் காட்டும் ஒரு நிகழ்ச்சி, டில்லியில் சில நாட்களுக்கு முன்பு நடந்தது.

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த, பாராளு மன்ற உறுப்பினர்கள் சிலர் கூடிப் பேசியிருக்கிருர்கள் எதைப் பற்றி?


முதலாளிகள் காங்கிரசுக்குள் நுழைந்து கொண்டு ஆதிக்கம் செலுத்து கிருர்கள் என்பதுபற்றி.

முதலாளிகளுக்கும் அவர்களின் தயவு பெற்றவர்களுக்குமே தேர்தலில் வேட்பா ளர்களாக நிற்கும் வாய்ப்புத்தரப்படுகிறது என்பதுபற்றி.

காங்கிரஸ் கட்சியை முதலாளிகள் ஆட்டிப் படைக்கிருர்கள் என்று. தம்பி! நாம் சொல்லும் போது, சீறிச் சீறிப் பேசுகிருர்களே, அவர்கள் இதற்கு என்ன சொல்லப் போகிருர்கள்? காங்கிரஸ் எம். பி க்களே அல்லவா கூடி, கை பிசைந்து கொள் கிருர்கள்; கண்களைக் கசக்கிக் கொள்கிருர்கள்!

காங்கிரசிலேயே ஒரு பகுதியினர்கூடிக் கதறிடும் நிலைமையே உருவாகி விட்டிருக் கிறது, முதலாளிகளிடம் காங்கிரஸ் சிக்கிக் கொண்டதன் விளைவாக!

காங்கிரஸ் கட்சியையே தமது கருவியாக்கிக் கொண்டிட முதலாளிகளால் முடிந்திருக்கிறது. அந்த முதலாளிகளிடம் சிக்கிக் கொண்டுள்ள காங்கிரசைத்தான், சோஷியலிசத்தை நிறைவேற்றப் போகும் கட்சி என்று காமராஜர் கூறுகிருர்; கூறுகிருரா? முழக்கமிடுகிருர்!!




காங்கிரஸ் கட்சியே முதலாளிகளிடம் மண்டி யிட்டுக் கிடக்கவேண்டி நேரிட்டுவிட்டது என்று, காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குமுறிப் பேசியிருப்பதுபற்றி, டில்லி, 'Patr ot'—பேட்ரியட்— எனும் ஆங்கில நாளிதழ், அக்டோபர் 20ல், எழுதி யிருப்பதனைத் தருகிறேன். தம்பி, காங்கிரஸ் சோஷியலிசத்தைக் கொண்டு வர முடிகிறதா இல்லையா என்பதுகூட ஒருபுறம் இருக்கட்டும், காங்கிரஸ் கட்சி, தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ளும் வலிவுடனுவது இருக்க முடிகிறதா என்பதுபற்றி எண்ணிப் பார்க்கும்படி, காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக்கொள்.

At a meeting in the Capital on Tuesday a large number of Congress M. P.'s expressed concern at the infiltration of the Congress by Big Business and feudal relics. The fears & expressed by M. P.'s are based on a major concerted effort being made by reactionary elements and their intelligent stooges to gain entry on a large scale into the legislative organs on the Congress ticket. The warning is timely because in many states Congress Bosses are hob-nobbing with Capitalists and former princelings and in some case have entered into secret alliances with them.

செவ்வாயன்று தலைநகரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பாராளு மன்ற உறுப்பினர் பலர், ஜெமீன் பரம்பரையினரும் பெரிய முதலாளிகளும், காங்கிரசுக்குள் நுழைந்து கொண்டு விட்டிருப்பதுபற்றி கவலை தெரிவித்துப் பேசினர். காங்கிரஸ் கட்சியின் 'டிக்கட்' பெற்று ஆட்சி மன்றங்களிலே இடம் பிடித்துக்கொள்ள, முதலாளிகளும் பிற்போக்காளரும் அவர்களின் கைக்கூலி அடிமைகளும் திட்டமிட்டு வருகின்றனர் என்ற ஆதாரமே, காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பி னர்கள் கொண்டுள்ள அச்சத்துக்குக் காரணம் (அவர்களின்) எச்சரிக்கை சரியான நேரத்தில் தரப் பட்டிருக்கிறது; ஏனெனில் பல மாநிலங்களில் காங்கிரஸ் பெருந்தலைவர்கள் மாஜி—மன்னர்களுட னும் முதலாளிகளுடனும் கூடிக் குலவிக்கொண்டு வருகின்றனர். சில இடங்களில் இரகசிய ஒப்பந்த உறவுகளையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

தம்பி! பேட்ரியட் தலையங்கத்தின் கருத்தைத் தமிழாக்கித் தந்துள்ளேன்.

நிலைமை இவ்விதம் இருக்கிறது: ஆனுல் காம ராஜரோ நீண்ட பேச்சுப் பேசுகிருர்; சோஷியலிசம் கொண்டுவரப் போகிறேன் என்று; அதனைச் செய்திட காங்கிரஸ் கட்சியால்தான் முடியும் என்று நம்பச் சொல்கிருர். எப்படி நம்பிக்கைகொள்ள முடியும்—நடுக்கொள்ளைக்காரர்கள் அவ்வளவு பேர் களும் அங்கு நடுநாயகர்களாக இருப்பது கண் கூடாகத் தெரியும்போது.

சோஷியலிசம் பேசுகிருர் காமராஜர் என்ருல், பேசுவதற்கு முதலாளிகள் அனுமதித்து இருப்பதால் பேசுகிருர்.

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறு சேமிப்புத் துறை,**
**தமிழ்நாடு அரசு.**


*ஏழை எளியோர் காதுகளுக்கு இசையாக இருக்கட்டும் என்பதற்காகப் பேசுகிறார்.*

*செயலில்? முடியாது! விடமாட்டார்கள்! இன்று காங்கிரஸ் கொண்டுள்ள அமைப்பு முறை அதற்கு இடம் கொடுக்காது; அது முதலாளிகளின் 'பாசறை' யாக ஆகிவிட்டிருக்கிறது.*

*சோஷியலிசம் பேசலாம்; செயல்படுத்த முடியாது என்று தம்பி! நான் கூறுகிறபோதுதான் கோபம் கோபமாக வருகிறது அவர்களுக்கு; ஆனால் அவர்களின் பெருந்தலைவர் காமராஜரே, ஜெய்பூர் மாநாட்டிலே பேசினார்; தெரிந்துதான் பேசி இருக்க வேண்டும்! என்ன பேசினார் என்பதனை நான் ராஜ்ய சபையிலேயே எடுத்துரைத்தேன்.*

> *பதினோரு ஆண்டுகளாக நாம் சோஷியலிசம் பேசுகிறோம்; ஆனால் செயல்படுத்தவில்லை.*
>
> *ஏழை—பணக்காரர் பேதத்தைப் போக்க முடியவில்லை என்பது மட்டுமல்ல, அதனைக் குறைக்கக்கூட நம்மால் முடியவில்லை.*

*இந்தக் கருத்துப்படவே காமராஜர் பேசியிருக்கிறார்.*

*அதனையே நாம் சுட்டிக் காட்டும்போது 'சுரீல்' என்று கோபம் பிறக்கிறது; விட்டேனா பார்! என்று வீறுப்பு பேசுகிறார்.*

*காங்கிரசில், மாஜி—மன்னர்களையும் தொழில் அதிபர்களையும் ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு சேர்த்துக் கொண்டு, அவர்களிடம் இலட்ச இலட்சமாகப் பணமும் 'கை நீட்டி' வாங்கிக்கொண்டு, அதைக்கொண்டு ஓட்டு வேட்டை ஆடிக்கொண்டு, நான் சோஷியலிசத்தைக் கொண்டு வரப்போகிறேன் என்று பேசி வருவது, குடைராட்டினத்துச் சிங்கப் பொம்மை மீது உட்கார்ந்து கொண்டு, என்னைச் சாமான்யமாக எண்ணிக் கொள்ளாதீர்கள்; நான் சிங்கத்தையே அடக்கி, அதன் மீது சவாரி செய்பவன்! என்று சிறுவர்கள் பேசி, கேட்பவக்களுக்குச் சிரிப்பு மூட்டுவதற்கு ஒப்பானதாகும். இல்லையா!*

அண்ணன்,

**அண்ணாதுரை**

6-11-66

தொடர் கதை:

# மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

மருண்டு சிரிக்கும் மனமும், உடலின் புதிர்க்கு விடைதேடும் உள்ளமும்; உணர்வின் வினுவுக்குத் தேர்வமைக்கும் வாழ்வுச் சூழ்நிலையுமாக அந்த நிலை!

விழிகளிலே காதலின் கனிவு, உடலிலே உணர்வின் வெப்பம்! போராடும் உள்ளத்தின் புதுமையலைகளின் கூத்தாட்டம்!

அழகு கனிந்து திரண்ட அமிழ்தாய், இன்பம் பொங்கும் புத்தூற்றாய்ப் புன்னகை யாழாய்ப்பூவிதழில் அமுதூறிநிற்கும் வண்ணச் சுவையேந்தி நின்ருள் வெள்ளிவீதி.

அமைதியாக இருந்தான் புகழேந்தி.

அவனுடலில் பரவிய மெல்லிய நடுக்கம் அவனை எள்ளிச் சிரித்தது.

"வாழ்வின் இன்றியமையாததமையாக திருப்பம் அணுகி விட்டது. இதிலிருந்து தப்பவே முடியாது.

என்னையே நம்பி எனக்கே ஆட்பட்டு என் வாழ்வை வளமிக்க என்னுடையவளாக ஒருபெண் வந்திருக்கிருள்.

என்வாழ்வின் ஒவ்வொரு நொடிக்கும் இவள் கூட்டாளி! ஆனல்?—

வெள்ளிவீதி தனக்குரியதையெல்லாம் முழு மனத்தோடு எனக்களிக்கலாம். நான்?

மீட்கமுடியாத ஈகைக்கு நானும் அவளும் முந்திநிற்கும் இந்த அரியபொழுதில் என்னென்னவோ எண்ணுவதா?

என் நெஞ்சச் சோலையில் ஆடும் நீலமயில் செல்வியை நீக்குவதா?

என் குருதியோட்டத்தின் உயிரோட்டமாக அமையும் பண்புச் செல்வியை விலக்குவதா? ஆனல்-

இதோ நிற்கும் வெள்ளிவீதி?

உலகின் தீர்ப்பையே தன்து ஆற்றலாகவும் ஆண்மையாகவும் கொண்டு என் முன் தன்னந்தனிமையில் என் தோல்வியைக் கண்டு எள்ளிநகையாட வந்திருக்கிருளே வெள்ளிவீதி!

நினைவலைகளில் புரண்டவன் நிமிர்ந்தான்.

அவனையே பார்த்துக் கொண்டு மயங்கி நிற்கும் அவள் பார்வையில் அவன் பார்வை பட்டுத் தெறித்தது.

நாணித் தலை கவிழ்ந்தாள் வெள்ளிவீதி.

அஞ்சித் தலைகவிழ்தான் புகழேந்தி.

வெள்ளிவீதி நல்ல அழகிதான். சிலநாட்களில் அவள் மேனியில் ஒரு புது ஒளி—வலிமையான பொலிவு தோன்றிவிட்டதே!

திருமணம் என்பது பெண்ணுள்ளத்தையும் உடலையும் ஒப்பற்ற அழகுடையதாக ஆக்கும் அமிழ்தமோ?

நடந்த கதையை நினைந்து நடக்கவேண்டியதைத் துறப்பது அறிவுடைமையா?

சீ.

எழுந்தான் புகழேந்தி. அடிமேலடியிட்டு நடந்தான்.

அவனுடலின் அணுக்கள் தோறும் ஆயிரங்கோடி உணர்ச்சி மின்னல்களின் கோலாட்டம்! கோடிக்கணக்கான ஆவல் கதிர்கள் உடலெல்லாம் பாய்ந்து பரவி எங்கும் விரவிப் பயின்றன.

சிலிர்ப்பு! சிலிர்பினூடே மயக்கம்! மயக்கில் மலரும் பேரினிமை.

அவன் அருகில் வந்ததை யுணர்ந்த வெள்ளி வீதியை நாணம் நசுக்கியது.

குழைந்து போனுள்!

திடுமென வெள்ளிவீதி புகழேந்தியின் காலில் விழுந்து வணங்கினுள்.

ஆ!

துடிதுடித்துப் போனுன் அவன் சற்றும் எதிர்பாராத அந்த அன்பு வழிபாடு அவன் உள்ளத்திலே ஆயிரக்கணக்கான வெடிகுண்டுகளை வீசித்தாக்கியது போலிருந்தது.

தனக்கு இந்த மதிப்பு தகுதியானதுதானு? என்று தவித்தான் தலைவன்.

'இதென்ன பழக்கம்?' என முணுமுணுத்த புகழேந்தி விலகி நின்றுன்,

நிமிர்ந்து நோக்கிய வெள்ளிவீதி நாணநகையொளி நலங்கிளர அவனை நோக்கினுள்; எழுந்தாள்.

அன்பு ததும்பிய அவள் அழகு முகத்தில் அமைதியின் ஒளிக்கதிர் வீசக்கண்டான்.

நெஞ்சங் குளிர்ந்து, நினைவு ஒருமையுற ஆர்வத்தோடு வெள்ளிவீதியின் சிலைத்தோளைப் பற்றினுன் புகழேந்தி.

மென்மையான அனிச்சமலரைக் கையில் ஏந்துவது போல வெள்ளிவீதியை ஏந்தி அன்போடு அருகில் அழைத்தான்.

வண்ணமிகு படைப்புகள்

வர்ணமய உலகம்

அதுவேகோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்

நெசவே நெஞ்சையள்ளும்

குர்தாக்கள்

பெல் பாட்டம்கள்

லுங்கிகள்

சேலைகள்

உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் :: சென்னை-8

## 47

வெள்ளிவீதியின் மேனி இன்பச் சிலிர்ப்பால் நெகிழ்ந்து சிலிர்த்தது. அவள் உள்ளமெல்லாம் அமிழ்தாய் உருகியது. அவள் உயிர் தமிழாய் இனித்துப்பனித்தது.

ஊன் குழைந்து உணர்வு நெகிழ்ந்து பேரின்பப் பேரினிமைப் பேறு சுவைத்தாள். புதுக்குருதி அவள் உடலெங்கும் பொங்கிப் பாய்ந்தது.

மெய்ம்மறந்தாள். நிலை—நினைப்பு—உலகு—உறவெல்லாம் மறந்தாள். நான் என்பதற்று பிறர் என்பதற்றுப் புகழேந்தியே தானாக, தானே அவனாக ஒன்றிக்கலந்து காதலேயாகித் தனித்துக் கனிந்து நின்றாள்.

உணர்ச்சிப் பூங்காவாய், உண்மை ஒளியாய், காதற்கோவிலாய்ப் பேரின்பப் படிவமாய் நின்ற வெள்ளிவீதியை நெஞ்சோடு நெஞ்சாக்கிக் கொண்ட புகழேந்தி, நிலைகொள்ளாமல் தவித்தான்.

தன்னுள்ளத்து உண்மையை வெள்ளிவீதியிடம் சொல்லாமல் இருப்பது பொய்ம்மையாகுமே என நைந்தான்.

அவன் நா உண்மையைக் கூறக் கூசியது.

உள்ளும் புறமும் தூய்மையாக வரும் வெள்ளிவீதியிடம் நான் ஏன் கரவுள்ளவனாக இணைய வேண்டும்?

"வெள்ளிவீதி!..."

"உம்?"

"நீ என்னை உண்மையில் விரும்புகிறாயா? மறைக்காமல் சொல்லு."—

இவ்வினாவை அவன் கேட்டிருக்கவே கூடாது! ஆனால், பெண்ணைத் தனிமையில் சந்திக்கிற எந்த மணமாகாத இளைஞனும் இப்படித்தானே ஒன்று கிடக்க ஒன்று கேட்பான்!

அவள் வாயால் விடை மொழியவில்லை.

புகழேந்தியின் மார்பில் புதைத்திருந்த தன் சுடரொளி வீசும் மலர் முகத்தை மெல்லத் தூக்கி நிமிர்ந்து அவன் முகத்தை கண்களை—ஆழ்ந்து நோக்கினாள்.

அவள் கண்களின் நோக்கம், அவள் உள்ளக் காதலின் ஆழத்தை அளந்துரைத்தது.

அவள் பூவிதழ்கள் அசைந்தன. நாணங்கனிந்த எழிற்புன்னகை வழிந்தது.

மீண்டும் அவன் பரந்த மார்பில் தன்னழகு முகத்தைக் குழந்தைபோலப் பொதிந்து கொண்டாள்.

அவள் கைகளைப் புகழேந்தி உணர்ச்சி மிகப் பற்றினான்.

அவனுள்ளம் பரபரத்தது.

"வெள்ளிவீதி, நான் உன்னிடம் உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். உண்மையில் நான் உயிருக்குயிராக இன்னொரு பெண்ணைக் காதலித்தேன்..."

(வளரும்)

குறுநாவல்:

# மறு வாழ்வு!

இளங்கீரன்

அவளை வழியனுப்பிவைத்து விட்டு நேற்றைப் போல் இன்று நொண்டாமல் நேராக அவள் நடந்து செல்வதைப் பார்த்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார். தான் தயாரித்த மருந்திற்கு எவ்வளவு சக்தி இருக்கிறது!

பொழுது விடிந்தபோதும் ஆற்றுநீரில் மூழ்கிய போதும் மூண்டெழுந்த ஆசை எல்லாம் மறைந்து விட்டதாக எண்ணிப் பூரிப்படைந்து இருந்தார். ஆனல் இப்போது அவளை மீண்டும் பார்த்ததும்—அவள் பேச்சைக் கேட்டதும் மறைந்து மடிந்து மக்கிப்போனதாக எண்ணிக் கொண்டிருந்த ஆசை கிளர்ந்து எழுந்தது. "வீட்டிற்குப்போய் அங்கேயே இருந்துவிடாதே. அடிக்கடி இங்குவந்து போய் இரு" என்று அவளிடம் வாய்திறந்து சொல்லாமல் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டார்.

நாட்கள் இரண்டு ஓடி மறைந்தன. ஆனல் அவர் மனதிலிருந்து அவள் நினைவு மறையவே இல்லை. தெள்ளிய நீரோடைபோல் தெளிந்த மனத்தோடு அவரால் முன்பு போல் இருக்க முடியவில்லை. எதையோ நினைத்து அது நிறைவேற வில்லையே என்று குழம்பி இருந்தார். எதிலும் நாட்டம் செல்லவில்லை. அவரை நாடிவரும் பக்தர்களுடன் கலகலப்பாகப் பேசமுடியவில்லை. பச்சிலை பறிக்கவோ பக்குவமாக மருந்து தயாரிக்கவோ இச்சையோடு தியானம் செய்யவோ எழுந்து உலாவிவரவோ அவரால் முடியவில்லை.

ஒருநாள் வந்து பல நாளைய அமைதியைக் கெடுத்த அவளையே நினைந்து அவர் மனம் நாடியது. அவளைப் பார்க்கவேண்டும், பக்கம் இருந்து பேச வேண்டும் என்று தேடியது. ஒவ்வொரு நாளும் செண்பகாதேவி அருவியையும் கோயிலையும் பார்த்துப் பார்த்து ஏமாற்றத்துடன் திரும்பி வந்தார். காடுகளில் விறகுவெட்டி வீடு நோக்கிச் சுமந்து செல்லும் பெண்களிலே செண்பகம் இருக்கிறளா என்று உற்று உற்றுப் பார்த்தார். அவள் வரவே இல்லை.

மனதைத் தேற்றித் திசை திருப்பிவிட முனைந்தார். ஆற்று நடுவிலுள்ள பாறையில் அமர்ந்து அங்கு ஓடித்திரியும் மீன்களைப் பார்த்தார். பெரிய மீன்கள், தண்ணீருக்கு அடியிலிருந்து மேலே வந்து மூச்சு விட்டுச் சென்றன. அதைப் பார்க்கும்போது "அதோ, நீ அமர்ந்திருக்கும் பாறைப்போல் இருந்தவன் இப்போது இதோ கீழே கிடக்கும் கூழாங்கற்களைப் போல் ஆகிவிட்டாய்" என்று அந்த மீன்கள் சொல்லிப்போவதுபோல் அவருக்குத் தென்பட்டது. எழுந்து நடந்தார்.

ஒரு இடத்தில் நின்று மலைமுகட்டை அண்ணாந்து பார்த்தார். சற்றுத் தொலைவில் 'இடைச்சிகல்' தெரிந்தது. முதன்முதலில் அவர் செண்பகாதேவிக்கு வந்தபோது மலையை ஒட்டி ஆள்போல் ஒரு நீண்டு பெருத்த பாறையும் அதன் தலைமேல் உருண்டைப் பாறையும் அதற்கும் மேல் சிறிய கல்லும் தெரிந்ததைப் பார்த்து அதிசயித்தார். அது என்ன என்றே அவருக்குத் தெரியவில்லை. ஒருநாள் கோயில் பூசாரியிடம் பேசிக் கொண்டிருக்கும்போது "அதோ தலையில் சுமை எடுத்துக்கொண்டு ஆள்போல் தெரிகிறதே, அது என்ன?" என்று கேட்டார்.

"சாமி! அது உங்களுக்குத் தெரியாதா? அதை நல்லாப் பாருங்க! தலையில் தயிர்ப் பானையை வைத்துக் கொண்டு ஒரு இடைச்சி நிற்பதுபோல தெரியும். அதுதான் இடைச்சிகல்." என்று விளக்கிய பூசாரி அதுபற்றி வழங்கப்படும் கதையையும் சொன்னர்.

"ஒருகாலத்துல சாமி, வயல்காட்டிலே அரிசியாகவே விளைஞ்சுதாம். தினமும் தயிர் விற்றுவரும் ஒரு இடைச்சி வயல் வரப்பில் போகும் போதே அரிசியைக் கைகளால் உருவி உருவிப் பானைகளில் நிரப்பினளாம். அதுகண்ட அரிசி "என்னை ஏன் இப்படி சித்திரவதை செய்கிருய்?" என்று கேட்டதாம். உடனே சினம் கொண்ட அந்த இடைச்சி" நீ நெல்லாகப் போ—நான் கல்லாகப் போகிறேன்" என்று சொல்லிச் சாபமிட்டாளாம். அதன் பிறகு அரிசி நெல்லாகி விட்டதாம். அவளும் கல்லாக அதோ நிற்கிருள்." என்று அந்தப் பகுதியிலே நிலவிய கர்ணபரம்பரைக் கதையைப் பூசாரி சொல்லக் கேட்டது முத்து சிரித்தார்.

இன்றே அவரது மன வேதனை அவரை அழச் செய்தது. அந்தக் கல்லைப்போல் தானும் மாறிவிடக் கூடாதா? என்று ஏங்கி ஏங்கிப் பெருமூச்சு விட்டார். முன்பு அந்தக் கல்லைப்பார்த்து அவர் சிரித்தார். இன்றே அந்த இடைச்சிகல் அவரைப் பார்த்துச் சிரிப்பதுபோல் இருந்தது.

ஏக்கத்தையும் பெருமூச்சையும் இதயத்திலேயே அடக்கிக்கொண்டு குகைக்குள்ளேயே படுத்துக் கிடந்தார். ஒருவார காலம்வரை அவர் எதிர்பார்த்த செண்பகம் வரவில்லை.

ஒருநாள் மாலை நேரம். சோர்ந்த மனத்தோடு குகையில் இருந்தார். வெளியில் இருந்து "சாமி!" என்ற குரல் கேட்டது. பலநாள் பசியோடு படுத்துக்கிடந்த மலைப்பாம்பு தன் இரையைக் கண்டதும் தலைதூக்கித் தாவிப் பிடிப்பதுபோல் பழகிய குரல் கேட்டதும் அவர் வெளியில் ஓடோடி வந்தார்.

அழகாக வாரி முடித்த தலையில் வண்ணப் பூச்சூடி வட்ட முகத்தில் பொட்டிட்டுப் புன்னகை தவழ செண்பகம் வந்து நின்றுள். சலவை செய்து மடிப்புக் குலையாத சேலையும் இரவிக்கையும் அணிந்து கையில் பூவும் பழமும் ஏந்தி வந்திருந்தாள்.

அகமும் முகமும் மலர அவளைப் பார்த்து, "நீ எப்போது வந்தாய்? உன்காயம் குணமாகி விட்டதா"? என்று ஆவலோடு கேட்டார் முத்து.

"நான் இப்போதான் வந்தேன் சாமி! நீங்க தந்த மருந்தினலே எம்புண்ணு இருந்த இடம் தெரியாமே ஓடிப்போச்சி. மறுநாளே வரலாம்னு நினைச்சேன். வீட்டிலே வேலை இருந்தது. வர முடியல்லே. இன்னிக்குத்தான் கோயிலுக்கு வந்தேன். அப்பிடியே ஒங்க நினைவும் வந்தது..." என்று சொல்லிக் குழைந்தாள்.

அவளது வளைவும் குழைவும் வந்திருக்கும் தோற்றமும் அவள் கோயிலுக்கு வரவில்லை—குகைக்குத்தான் வந்திருக்கிருள் என்று பறை சாற்றின.

கையோடு கொண்டுவந்த பூவையும் பழத்தையும் அவரிடம் கொடுத்தாள். ஆவலோடு அவர் அவைகளை வாங்கிக் கொண்டு அவளைக் குகைக்குள் அழைத்தார். அவர்கள் இருவரும் உள்ளே சென்ருர்கள். பூவைப் பூசை மாடத்தில் வைத்து விட்டு ஆசையோடு பழத்தைச் சாப்பிட்டுக் கொண்டே அவர் செண்பகத்தைப் பார்த்துச் சிரித்தார். அவளோ ஆடவரை வளைத்துப் போடுவதில் கைதேர்ந்தவள்போல் கொஞ்சிக் கொஞ்சிப் பேசினுள். நேரம் மெல்லமெல்ல இருட்டியது. பாடும் பறவைகளின் ஒலியடங்கி அமைதி சூழ்ந்தது. முன்புபோல் அவளையும் குகையிலேயே தங்கச் சொல்லி அவர் கேட்டுக் கொண்டார். அதற்காகவே அவளும் வந்திருப்பவள்போல் சுட்டி சொல்லாமல் சம்மதம் தெரிவித்தாள்.

அன்றிரவு அந்தக் குகையிலே குயில் பாடியது; கோலாகலமாக மயில் ஆடியது. இரவு இன்பமாகக் கழிந்தது.

செண்பகாதேவி அருவிக்குத் தினமும் குளிக்க ஆட்கள் வரத்தவறினுலும் செண்பகம் சாமியாரைப் பார்க்க வரத்தவறுவதில்லை. அவர், பக்தர்களுக்கு ஆசி வழங்க, அவள் அவருக்கு விருந்து வழங்கினுள்.

அவர், தன்னை மறந்தார்; தன் நிலையை மறந்தார்; அவளையே நம்பிக்கிடந்தார்.

மலையிலே மஞ்சி தவழ, அவர் மடியிலே அந்த வஞ்சி தவழ அவர்களின் வாழ்க்கை ஓடியது.

தியானமும் தீராப்பிணி தீர்க்கும் பச்சிலையும் அவர் மனதை விட்டு மறைந்து விட்டன. ஆனுல் செண்பகத்தின் பால்வடியும் முகம் மட்டும் மறையவே இல்லை. காலத்தையும் பொழுதையும் அவளை அழகு படுத்துவதிலும் அவள் மேனிக்கு மெருகு ஏற்றுவதிலுமே கழித்தார். பாலும் பழமும் பகட்டான ஆடை அணிகளும் அவளுக்குக் குறையில்லாது கிடைத்து வந்தன. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவள் உருமாறி வந்தாள்.

விதம் விதமாக அலங்காரம் செய்துகொண்டு தினம் தினம் தன்னைக் கடந்து காட்டுக்குள் செல்லும் பெண் யார்? அவள் எங்குபோகிருள்? என்று செண்பகாதேவியம்மன் கோயில் பூசாரி, திருமலை ஓதுவார் கவனிக்கத் தொடங்கினுர். ஒருநாள் அவளைப் பின்தொடர்ந்து சென்று பார்த்த போது தான் அவள் செல்லுமிடம் அவருக்குப் புரிந்தது. குகைச் சாமியாரிடம் அவளைப்பற்றிக் கேட்டார்.

அவரோ, "தீராப் பிணிக்குத் தினமும் மருந்துண்ண வரும் என் பக்தை" என்று பதில் கூறி மழுப்பினர்.

மருந்துண்பவளுக்கும் விருந்துண்பவளுக்கும் வித்தியாசம் தெரியாமலா அந்த பூசாரி ஐம்பது வயதைக் கடந்திருப்பார்?

பூசாரியின் வாயிலிருந்து அங்கு கடைகண்ணி வைத்திருப்பவர்களுக்கும் அவர்களுடமிருந்து பக்தர்கள் சிலருக்கும் குகைச்சாமியார்—செண்பகத்தின் உறவு பற்றிய செய்தி பரவத் தொடங்கியது.

தான் களங்கமற்றவர் என்று செய்தி பரவ விடாமல் இருக்க முத்து எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார்.

உலைவாயை மூடி விடலாம்; ஊர்வாயை மூடி விட முடியுமா?

கொஞ்சம் கொஞ்சமாகப் பக்தர்களும் நோயாளிகளும் குறையத் தொடங்கியதை முத்து கண்ணுற்ருர். விபரம் அறியாதவர்களே முன்பு போல் குகையைத் தேடிவந்தார்கள். அவர்களுக்கும் செய்தி தெரிந்து விடுமுன்னர் ஒரு நாள் யாரிடமும் சொல்லாமல் குகையைக் காலிசெய்து விட்டு மலையிலிருந்து கீழே இறங்கினுர்.

சடாமுடியையும் காவி கமண்டலத்தையும் மாற்றினர். திருவோட்டை ஏந்தி குற்ருலநாதர்—குழல்வாயம்மன் சன்னதியில் தஞ்சம் புகுந்தார்.

## 7

துன்பத்தை இன்பமயமாக்கிய தோகை மயிலாள்—தொட்டணைத்துச் சுகம்தந்த கட்டழகி—கனவுலகைக் கன்னி—செண்பகம் என்ன ஆனுள் என்பது முத்துவுக்குத் தெரியாது. அவளும் ஒரே இடத்தில் ஒட்டிக்கொள்ளும் அட்டையல்ல. பல இடம் சுற்றித் திரியும் சுதந்திரப் பறவை—இது அவருக்கே தெரியாது. எனவே இருவரும் ஒருவரை ஒருவர் தேடியலையவில்லை. தங்களது உறவை இருவருமே கனவுபோல் மறந்து விட்டார்கள்.

புண்ணியம் தேடப் புனித நீராடவரும் பக்தர்களையும் அருவி நீராய்க் காசுகளை அள்ளி வீசும் கனதனவான்களையும் நம்பிக் குற்ருலநாதர் கோயிலைச் சுற்றி வாழும் பண்டாரங்களோடு முத்துவும் சேர்ந்து கொண்டார். மற்றப் பண்டாரங்களைப் போல் அவர் எச்சில் சோறு தின்ன மாட்டார். வீதி வழி சென்று வீடு விடாகப் பிச்சை எடுத்து அலைய மாட்டார். தன்னிடமுள்ள மூலிகைகளையும் மருந்துகளையும் கடைபரப்பிக் கொண்டு கோயில் முன்னுல் உட்கார்ந்து விடுவார். அதை விற்றுவரும் பணத்தில் தன் வயிற்றை நிரப்பினர். எப்படியோ தன் மானத்தை விடாமல் அவர் தன்னைக் காத்துக் கொண்டார்.

மற்றப் பண்டாரங்களை விட்டுத் தனித்து வாழ்ந்தாலும் முத்துவை அவர்கள் வெறுக்கவுமில்லை; வேற்றுமொழி பேசி ஒதுக்கவுமில்லை. சகல வித்தைகளும் தெரிந்த சித்தர் என்றே அவரை மதித்துப் போற்றினுர்கள். தங்களுக்குள் ஏற்படும் சச்சரவுகளுக்கும் சந்தேகங்களுக்கும் அவரையே அணுகித் தீர்த்து வந்தார்கள். எந்த நேரத்திலும் எந்த வழக்கிலும் முத்துவின் தீர்ப்பே முடிவானது. அவர் அந்தப் பண்டாரங்களுக்குத் தலைவராக மட்டுமல்லாது நோய் தீர்க்கும் வைத்தியராகவும் இருந்தார்.

(வளரும்)

# கவிதைப் பூங்கா

## "அண்ணா ஒரு நாடக ஆசிரியர்"

கவிஞர் கவிதைதாசன்

பம்மலவர் மறைந்தபின்னே, பாரில் நல்ல
　　பம்பரம்போல் சுற்றுகின்ற அண்ணா வந்தார்!
பொம்மைகளாய்த் தலையாட்டும் மாந்தர் தம்மைப்
　　பொருள்புரிந்தே தலையாட்ட வழியைக்
　　　　　　　　　　　　　　கண்டார்!

செம்மைபடும் வழி, நாட கந்தான் என்றே
　　சிந்தித்தார் ஓர் இரவு! வெற்றி கண்டார்!
தம்மைமெழு காக்கி, இருட் டில்உள் ளோரைத்
　　தரணியிலே ஒளியூட்டி வாழ வைத்தார்!

இசைத்தமிழால் இயற்றமிழால் இயலா வொன்றை
　　இளம்பாகாய் உருக்குகின்ற கூத்தால் கண்டார்!
அசையாத மனத்தையெலாம் ஆட விட்டார்
　　அதற்குள்ளே கருந்தீந்து குடிபு குந்தார்!
அசையாத தேரதனை அசைய விட்டால்
　　அதனாலே அடைகின்ற பயன்தான் என்ன?
வசையொழிந்து வாழயிங்கே ஆசான் அண்ணா
　　விரலசைவில் நாடகத்தைக் கணடார் வென்றார்!

நாடகத்தால் ஆசைவளர்த் தவர்கள் உண்டு
　　நலியும்மோ கம்வளர்த்த வர்கள் உண்டு
நாடகத்தால் காசைவளர்த் தவர்கள் உண்டு
　　நல்லோர்க்கு கேடுவளர்த் தவர்கள் உண்டு
நாடகத்தால் நம்பிக்கெட்ட வர்கள் உண்டு
　　நாணமிலா பெண்மைவளர்த் தவர்கள் உண்டு
நாடகத்தால் நல்லறிவை வளர்த்தோர் யாரோ?
　　'நம்அண்ணா' என்றுசொன்னால் மிகைதான்
　　　　　　　　　　　　　　உண்டோ?

பாட்டதனைக் கேட்பதற்குக் கூட்டம் சேரா
　　பக்குவமாய் சொன்னாலும் நிற்க மாட்டார்!
போட்டதுவோ வெறுஞ்சோறாய்ப் போனால், இங்கே
　　பூரிப்பாய் யாருண்பார்! என்றே அண்ணா
கூட்டமது சேருவது கூத்திற் கென்றே
　　கூட்டு, கறி இனிப்போடு இலையைப் போட்டார்
கூட்டமதைக் கூட்டிவிட்டார்! கொள்கை தன்னைக்
　　குணமறிந்து கூறுகின்ற ஆசான் அண்ணா!

ஆடிமுடித் தபின்ஆடை களைந்து விட்டு
　　அயர்ந்துறங்க இருள்மேடை வங்க மண்ணில்
நாடகத்தை முடித்துவிட்டேன் என்று சொல்லி
　　நாடிவிட்டீர் பெருவாயில்! மேடை போட்டுப்
பாடத்தைச் சொன்னவரே! காலம் சொல்லும்
　　பாடத்தைக் கற்பதற்கோ தனியே சென்றீர்!
பாடுகின்ற அலையோசை கேட்டு, வாழ்க்கை
　　படிக்கின்ற பாடமதை கேள்என் றீரா?

தான்மாய்ந்து தார்தந்த வாழை யுண்டு!
　　தான்மாய்ந்து நெறிதந்த சான்றோர் உண்டு!
தான்மாய்ந்து நீர்தந்த மேகம் உண்டு!
　　தான்மாய்ந்து நாடுதந்த வீர முண்டு!
தான்மாய்ந்து தலையீந்த குமணன் உண்டு!
　　தான்மாய்ந்து நாடகத்தை காத்தாருண்டோ?
தேன்பாய்ந்து ஊனினிக்கும் தமிழால் ஈங்கு
　　தெவிட்டாதே அளித்தவாசான் அண்ணா உண்டு!

## "அண்ணா"

M. சண்முகம்

காஞ்சி நகர் உதித்த
　　கடமையில் சிறந்த செம்மல்
கண்டோர் வியந்திடவும்,
　　கேட்டோர் மகிழ்ந்திடவும்,
கூட்டணி அமைத்துவைத்துக்
　　கொள்கைகளை எடுத்துக்கூறி
கோட்டையைப் பிடித்துவிட்டார்
　　குதூகலம் கொண்டோம் அன்று,

பங்காரு அம்மைபெற்ற
　　பார்மைந்தன் மறைந்விட்டார்
'பச்சையப்பன்' அளித்திட்ட
　　பசும்பொன்னும் மறைந்துததுவே,
கடமை கடமை என்று
　　கண்ணியமாய் வாழ்ந்திட்டார்,
கட்டுப் பாட்டுடனே
　　காலமெல்லாம் வளர்ந்திட்டார்;

★ ★ ★

## பார்வை!

கருமலைப்பழம் நீ, ஊற்றங்கரை

அடிக்கடிப் பார்க்கின்றாள்!—என்னை
அடிக்கடிப் பார்க்கின்றாள்!—அவள்
அடிக்கடிப் பார்க்கின்றாள்!

நொடிக்கொரு முறைஎழில்
　　கருவிழி என்ற
நெடுங்கணை புறம் விழ
　　'பிடி! பிடி!—என்றே! (அடிக்)

கருமுகில் தவழ்ந்திடும்
　　கருங்குழல் மின்னி
அருந்துகில் நழுவிட
　　அணங்கென நின்று
விழுங்கிட வருமொரு
　　எமனென பாவை
அழலிடை உருகிடும்
　　இரும்பென நின்றே! (அடிக்)

புதுமுழு நிலவென
　　ஒளிமுகம் கண்டேன்!
மதுவிதழ் விரிந்திட
　　இரு விழி மொண்டேன்!
ஒருமுறை உணர்வுடன்
　　அவளிடை தொட்டேன்!
'இரு! இரு! விழு! விழு!
　　எனப்பொருள் தோன்ற! (அடிக்)

# நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!



## பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

**குடும்பநலத் திட்டம்**

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம்:—
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்! இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
88, திருக்கச்சிநம்பித் தெரு, அன்னி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.